# புனித பிரான்சிஸ் அசிசியார்

## ( வரலாற்று நாடகம் )



வெளியீடு : 7

PAX CHRISTI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி உரை

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
15 – 6 – 85

**1986ம்** ஆண்டு சமாதானத்தின் ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. சமாதானத்தையே தனது உயிர் மூச்சாகக் கருதி, அதைப் போதித்த புனித பிரான்சிஸ் அசிசியாரின் வரலாற்றைக் கூறும் ஒரு நாட்டுக்கூத்து பாக்ஸ் கிறிஸ்ரி (Pax Christi) இயக்கத்தினரது முயற்சியினால் எழுதி மேடையேற்றப்பட்டது.

12ம் நூற்றாண்டிலே சமாதானத்தின் புனிதராக விளங்கிய புனித பிரான்சிஸ் அசிசியாரை இந்த சமாதானத்தின் ஆண்டிலும் நம் மக்கள் முன்னிலையில் விசேடமாக நம் இளம் தலைமுறையினர்முன் கொண்டுவருவது ஒரு வரவேற்கத்தக்க முயற்சியாகும்.

ஈழத்தில் கத்தோலிக்க மரபில் விசுவாசத்தைக் காக்க நாட்டுக் கூத்துகள் பயன்பட்டது போன்று, விசுவாசம் சோதனைக்குள்ளாகும் இக்காலத்திலும் இம் முயற்சி அதனை வளர்க்க உதவும் என்று எண்ணுகிறேன்.

இக்கூற்றினை எழுதிய கவிஞர் தேவதாசனுக்கும், மேடையேற்றிய கலைஞர்கட்கும் எங்கள் பாராட்டுக்கள்.

நற்செய்திப் பணியகத்தின் உதவியுடன் பாக்ஸ் கிறிஸ்ரி (Pax Christi) இயக்கத்தினரால் வெளியிடப்படும் இந்நூலானது நம் தலைத் திருச்சபையினது பல பங்குகளிலும் மேடையேற்றப்படவும், அதன்மூலம் நம் பாப்பரசரின் விருப்பப்படி சமாதான வித்துக்கள் எங்கும் பரப்பப்படவும் பெரிதும் உதவுமென நம்புகிறேன்.

\+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நாட்டுக்கூத்து எங்கள் நாடகப் பாரம்பரியத்தின் அடிப்படை. நவீன நாடகங்களையும் செழுமைப்படுத்தும் ஊற்றுக்களைக் கொண்டது அது. ஈழத்துத் தமிழ் நாட்டுக் கூத்துப் பாரம்பரியத்திலே தமிழ்க் கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்கள் தனித்துவமான பண்புகளையும் தனிப்பட்ட ஒரு வரலாற்றினையும் கொண்டமைகின்றன. இவ்வரலாற்றிலே இன்று வெளிவரும் புனித பிரான்சிஸ் அசிசியார் நாட்டுக் கூத்து நூலும் ஓரிடத்தைப் பெற்றுக் கொள்கின்றது. இதனைப் பாடியவர் கவிஞர் பாஷையூர் தேவதாசன் அவர்களாகும். கவிஞருடைய கவித்துவம் தவிர்க்க முடியாதபடி நாடகப் பாடல்களினூடாகப் புலப்படுகின்றது. புனித அந்தோனியாருக்குக் காப்புக் கூற வந்த ஆசிரியர்,

> "கார்பூத்த நாவழியாக் கருணை வேந்தன்
> கடல்மீனுக் குரைத்திட்டோன் காப்புத்தானே"

என்று பாடுகின்றார். "கடல்மீனுக்குரைத்திட்டோன்" என்னுந் தொடர் புனித வரலாற்றுப் பின்னணியிலே உதித்ததாகும்.

"பெரும் ஞானி பிரான்சிசார் பெருமை பாடமுனையும் ஆசிரியர், பழைய வரலாற்றைப் பாட எண்ணிய போதும், தன்னுடைய சமகால நிகழ்வுகளினின்றும் விடுபட முடியாதவராயிருப்பது தவிர்க்க முடியாததாகும்.

> "போர்வீரர்களே! ஒரு இனத்தை அழித்து இன்னொரு இனத்தை ஆக்குவதே எம் நோக்கம். பெரும்பான்மையான பெருஜியா நாட்டவர், சிறுபான்மையாகிய அசிசி நாட்டவரை அழிக்க வேண்டும். இதில் தான் இனவொதுக்கல் ஆரம்பிக்கின்றது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் உரைநடைப்பகுதி தற்போது நாம் எதிர்நோக்கும் நிலையினை மனதிற்கொண்டு எழுதப்பட்டது போலமைந்துள்ளது. அசிசி நாட்டு வீரர்கள் பெரும்பான்மையின வீரர்களைத் தாக்கும் தன்மையினை,

" புல்லாகொடு வேங்கையும் நாமடா "

என்று வீரன் ஒருவனுடைய கூற்றாக கூறவைக்கின்றார் ஆசிரியர்.

நீண்டதொரு கதையினை தற்காலத்துக்கு ஏற்றபடி சுருக்கமாக பாடல்களாலும் உரையாலும் ஆசிரியர் அமைத்துள்ளார். கல்லூரி மாணவர்களும் இந்நாடகத்தைப் பழகி நடிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. எளிமையான சொற்களும் பேச்சோசைப் பண்பும் நிறைந்துள்ளன. இது போன்ற பல்வேறு ஆக்கங்களை ஈழத்தமிழுலகத்துக் கவிஞர் தேவதாசன் நல்குவதற்கு இறையருள் பாலிக்க வேண்டுகிறேன்.

பேராசிரியர் கலாநிதி
அ. சண்முகதாஸ்

தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
15-7-86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☞ உங்கள் கவனத்திற்கு.....

PAX CHRISTI அறவழிக்கு இசைவான ஒரு ஆன்மீக வாழ்க்கையை மக்களிடையே கட்டியெழுப்ப விழைகிறது. கிறீஸ்தவர்களாகிய நாம் வெளிப்படையான பலாத்கார மோதல்களுக்குக் காரணமாயிருக்கும் அநீதிகளை ஒழிக்கக் கடமையுள்ளவர்கள். எனவே இவ்வநீதிகளினுல் எழும் சண்டைகளை அறவழியில் தீர்ப்பதற்கான வழிகளை ஆய்வு செய்வது எங்கள் கடமை எனவும் கருதுகிறது.

எமது வெளியீட்டு வரிசையில்......

(1) திருச்சபையின் சாத்வீக மரபு
(2) அன்பு — அறவழி
(3) இரு அறவழி வீரர்
(4) டொறத்தி டே அம்மையார்
(5) சமாதானத்தின் வழி
(6) மனச்சாட்சியின் கைதி
(7) புனித பிரான்சிஸ் அசிசியார்
( வரலாற்று நாடகம் )

எமது வெளியீடுகள் ஒவ்வொன்றும் வீணே தூக்கி வீசப்படுகின்ற பொருளாகிவிடாமல் இன்றைய காலகட்டத்தில் பயனுள்ளவையாக பவித்திரப்படுத்தி அறிவூட்டப்பட வேண்டும்.

வெளியீடுகள் கிடைக்குமிடம் :

சுவாமி ஜெயசிலன்
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

"காணமல் போன பொருள் கண்டுபிடிக்கப்பட்டால் அதைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கும் இறைவனுக்கும் நன்றி கூறுவதே ஒரு பண்பாளனின் கடமையாகும்". இதற் கிணங்கவே இந்த நாடகம் எழுந்தது.

கடந்த இருபது வருடங்களாக மாதோட்டம், மலையகம், வன்னி, யாழ்நகர் ஆகிய பகுதிகளில் கிராமியக்கலை பற்றி நான் செய்துகொண்ட ஆய்வின் காரணமாக நான்கு நாட்டுக் கூத்துக்கள் என்னால் எழுதப்பட்டது. அவை முறையே பாஷையூர், கிளிநொச்சி, யாழ். வீரசிங்கம் மண்டபம், கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சேவியர் குருத்துவக் கல்லூரியிலும் மேடையேற்றப்பட்டது.

எனது இம் முயற்சியை அரங்கேற்றவும், அச்சேற்றவும், "புனித பிரான்சிஸ் அசிசியார்" நாடகத்தை நூலுருவில் கொணரவும் முன்நின்று உதவிய பாக்ஸ் கிறிஸ்ரி (Pax Christi) நிறுவனத்திற்கும் என்றும் நன்றியுடையவனாய் உள்ளேன்.

புனித பிரான்சிஸ் அசிசியின் நாடகம் எனது முயற்சியில் கொண்ட ஆய்வால் முழுமை பெற்ற நாடகம் என்று கூற லாம். 1985-12-03 ம் திகதி இந் நாடகம் மேடையேற்றிய போது யாழ். மறை மாவட்ட ஆயர் அதி. வந். வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்கள் எனது கலைச்சேவையைப் பாராட்டி பொன்னடை போர்த்தி கௌரவித்தமையை எனது பெரும் பேறாகக் கருதுகின்றேன், இதை ஈழத்து தினசரிகளான ஈழ முரசு, ஈழநாடு, உதயன், தினகரன் எடுத்தியம்பின. அவை களுக்கும் எனது முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கி ஊக்குவித்த கலைஞர்கள் யாவருக்கும் வளர்ச்சியில் பங்கேற்கும் வாசக உள்ளங்கட்கும் என் இதயம் மலர்ந்த நன்றிகள்.

திட்டமிடல் பகுதி,<br>கச்சேரி, வவுனியா.<br>1986-06-18

கவிஞர்<br>தேவதாசன்<br>பாஷையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பிரான்சீஸ் அசிசியார் வரலாற்று நாடகச் சுருக்கம்

**அங்கம் 1**

இத்தாலி நாட்டின் உம்பிறிய மாகாணத்தின் அசிசி செல்வ மிக்க வணிகர்கள் நிறைந்த நகர். வணிகப் பெருங்குடியில் பிறந்த இளைஞன் பிரான்சிஸ் நண்பர் இருவருடன் அசிசித் தெருக்களிலே இளமையின் இன்பத்தைச் சுவைத்துத் திரி கிற வேளையில், அவ்வூரின் இளம் பெண்டிரோடு ஏற்படும் ஒரு சிறிய சர்ச்சையில் மங்கை கிளாரு குறுக்கிட்டுச் சமரசம் செய் கிருள்.

**அங்கம் 2**

அசிசியின் வணிகப் பெருமகன் பீற்றர் பேர்ணத்தோன் தன் மகன் பிரான்சிஸ் வணிகத்தின் நுணுக்கங்களைக் கேட்ட றிந்து தன்னைப்போல் சிறந்த வணிகனுவான் என எதிர்பார்த் தான். ஏழைகளின் மேல் இளமை தொட்டே இரக்கம் கொண்ட பிரான்சிசின் அன்பு நெஞ்சம் இதற்கு இடையூருக அமைகிறது.

**அங்கம் 3**

பெருஜியா நகருக்கும், பிரான்சிஸ் தலைமை தாங்கும் அசிசி நகரவர்களுக்கும் போர். தோல்வியுற்ற அசிசி நகரத் தவரோடு பிரான்சிஸ் சிறை வைக்கப்படுகிருர். அங்கு ஆண் டவரது அழைப்பு அசரீரி மூலம் அவருக்குக் கிடைகிறது.

**அங்கம் 4**

விடுதலையடைந்து அசிசி திரும்பும் பிரான்சிஸ் ஒரு குஷ்ட ரோகியைச் சந்தித்து அவனில் கிறிஸ்துவைக் கண்டு அரவ ணைக்கின்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கம் 5**

பிரான்சிஸ் புனித தமியான் ஆலயத்தில் தூங்கும்போது சிலுவையில் அறையுண்ட இயேசு அவருக்குக் கனவில் தோன்றி "பிரான்சிஸ் அழியும் என் வீட்டைத் திருத்து" என்று கட்டளையிடுகிறார்.

**அங்கம் 6**

மனம்மாறி பிச்சைக்காரர்கட்கு நண்பனாகிவிட்ட தன் மகனை பேர்ணதோன் கட்டி இருண்ட நிலவறைக்குள் பூட்டி வைக்கிறான். அதன்பின் ஆயரிடம் அழைத்துவர பிரான்சிஸ் எல்லா உடைகளையும் கழற்றி "இன்று தொட்டு விண்ணகத்தில் இருப்பவரே என் உண்மைத் தந்தை" என்று வீட்டைத் துறக்கிறார்.

**அங்கம் 7**

இளைஞன் பிரான்சீஸ் ஏழையுடை அணிந்து சாதாரண மக்களுக்கு இயேசுவின் நற்செய்தியைப் போதிக்கிறார்.

**அங்கம் 8**

மூன்றாம் இன்னசன்ற் பாப்பிறை திருச்சபை ஆட்டம் காண்பதாகக் கனவில் கண்டு கருதினால் ஒருவருடன் 13ம் நூற்றாண்டுத் திருச்சபையின் நிலையை செபத்திலே ஆய்வு செய்கின்றார்.

**அங்கம் 9**

அசிசியின் வீர மங்கை கிளாறாவும் அவள் தோழிகளும் அண்ணல் பிரான்சீசின் போதனை கேட்டு, துறவறம் பூண விரும்பி அவரிடம் வருகின்றனர்.

**அங்கம் 10**

பிரான்சிசும் அவளை வரவேற்று பெண்களுக்கென்று ஒரு சபையைத் தொடங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கம் 11**

பிரான்சீசும் அவர் துறவிகளும் உரோமாபுரிக்குப் பாத யாத்திரை சென்று 3ம் இன்னசன்ற் பாப்புவின் அங்கீகாரத்தைத் தம் துறவற சபைக்குப் பெறுகின்றனர்.

**அங்கம் 12**

சீரியா அரசன் சுல்தான் மாலிக் இல் காமில் தன் நாட்டின் வளம் வினவி, தன் நாட்டில் வெள்ளையர்கள் படையெடுப்புக்கு உதவியாக எந்த ஒற்றனும் நுழையக் கூடாது என்று எச்சரிக்கிறுன்.

**அங்கம் 13**

பிரான்சிஸ் அசிசியார் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அன்பு காட்டிப் போதிக்கிறுர்.

**அங்கம் 14**

கிளாரம்மாள் தான் சபைக்குப் புதிய மங்கையர்களைச் சேகரித்து நற்செய்தியை போதிக்கப் புறப்படுகிறுள்.

**அங்கம் 15**

அசிசியினுட் புகுந்து மதங் கொண்ட ஒநாயை பிரான்சிஸ் சந்தித்து அதனை அன்போடு தடவிக்கொடுத்து சாந்தப்படுத்துகின்றுர்.

**அங்கம் 16**

சீரியா அரசனின் ஏவலாளர்கள் பிரான்சிஸ் தம் நாட்டு எல்லைகட்குள் அன்பு மதத்தைப் போதிப்பதைக் கண்டு இழுத்து வருகின்றனர். சினங்கொண்ட மன்னன், அண்ணலின் அன்புரு கண்டு மனம்மாறி சாந்தமடைந்து அவரை அன்புடன் உபசரித்து தன்னுட்டில் மறை போதிக்க அனுமதிக்கிறுன்.

**அங்கம் 17**

பிரான்சிஸ் அசிசி திரும்பி தியானத்தில் இருக்கையில் இயேசு தோன்றி தனது ஐந்து திருக்காயங்களையும் அவரின் உடலிலே பதித்து விடுகிறுர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு விருத்தம்

சீர்பூத்த அசிசியாம் சிலைகொள் நாட்டில்
சிறுபாலன் தொழுவமதில் சிறப்பாய் கண்ட
பேர்பூத்த ஆவியருள் பேறும் கொண்ட
பெரும்ஞானி பிரான்சீசார் பெருமை பாட
பார்பூத்த மரியன்னை பாதம் தன்னை
பக்தியாய் இவ்வரங்கில் பாவால் போற்றி
கார்பூத்த நாவழியாக் கருணை வேந்தன்
கடல்மீனுக் குரைத்திட்டோன் காப்புத் தானே.

## தோடையம்

1. பஞ்ச காயமதை பதித்தோர்
பறவைக்குரைசெய் அசிசியின்
மிஞ்சு புதுமைகொள் காதைதன்னை
மிகவுயர்ந்து பாட

2. அன்னை மரியன்னை சரணமதை
அடியவர்நாம் துதிசெய்தே
பொன்னை யொத்ததோர் சரிதைதன்னை
பொலிவுடனே கூற

3. பாவிகள் ஈடேற்றும் ஈசனவர்
பாதமதையே போற்றிசெய்து
கால மெல்லாமே ஒன்றிணைந்தே
கன்னலிசை பாட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 1

**இடம் :** இத்தாலி தேசத்தைச் சேர்ந்த உம்பிறியா மாகாணத்திலுள்ள அசிசி நகர்.

**பங்கு கொள்வோர் :** இளைஞன பிரான்சிஸ், நண்பரிருவர், மங்கை கிளாறு, தெருவால் போகும் பெண்கள்.

**நிலைமை :**

இளைஞன் பிரான்சிஸ், தனது இரு நண்பர்களோடு நகர் வலம் வரும்போது, தெருவால் போகும் பெண்களைக்கண்டு கேலி செய்கின்றார். அப்போது மங்கை கிளாறு குறுக்கிட்டு பிரான்சிஸ்சுக்கும் அவரது நண்பர்களுக்கும் புத்திகூறி மன்னிப்புக் கோருகின்றார்.

**பிரான்சிஸ் கொச்சகம்**

குன்றில் ஆடும் முகில் படிவம்
குளத்தில் ஓடும் கயல் வடிவம்
மன்றில் பாடும் எழில் பருவம்
மனத்தை அள்ளும் நகரிதுவே!
கன்றில் துள்ளும் நிலைமாறி
காளை வயதைப் பயன் பெறுவோம்

**தரு**

**இராகம்:** பரசு **தாளம்:** ரூபகம்

**மெட்டு:** விட்டுப்பிரியாதே — தேவசகாயம்பிள்ளை

**பிரான்சிஸ்:**

**பல்லவி**

கூடியே பார்த்திடுவோம் — நகர் தன்னை
கூடியே பார்த்திடுவோம்.

**சரணம்**

கூடியே பார்ப்போமே கூட்டமாய் நாமுமே
பாடியே ஆடுவோம் பாங்காகத் தோழரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடியே வாருங்கள் நங்கைமரர் போகின்றார்
சூடியே போருரே சுறுக்காக வாருமே.

— சூடியே பார்த்...

**1ம் நண்பன்:**

வீரமாய் நாமுமே வில்வித்தை கற்றோமே
தீரமாய் பல்வேறு திக்கெல்லாம் சென்றோமே
நேரமோ போகுதே நெடியதோர் மாடம்பார்
மாரனூர் அம்புதான் மார்பிலே பாயுதே

— சூடியே...

**2ம் நண்பன் :**

தங்கத்தை யொத்ததோர் தையலார் காண்கின்றோம்
அங்கங்கள் எல்லாமே அழகாகத் தோன்றுதே
செங்கையை வீசியே செருக்காக நடக்கின்றார்
சிங்கம்நேர் எம்மையே சிறிதேனும் பார்க்காமல்

— சூடியே...

**பிரான்சிஸ் :**

அன்னத்தை யொத்ததோர் அரிவையர் போகின்றார்
பொன்னிணைநேர் கிண்ணமோ பொற்தேரின் சிலைகளோ
சொன்னவெம் பாவெல்லாம் சொற்பந்தான் ஏறுமோ
எண்ணையே வாட்டுதே எட்டித்தான் நடப்போமே

சூடியே...

**1 ம் நண்பன் :**

சிரியாமல் பெண்களும் சிட்டாகப் பறக்கின்றார்
எரிகின்ற எம்நெஞ்சை எழுதவோ ஏடுண்டோ
பரிகொண்ட வால்போலே பறக்குதே கூந்தலே
தரிக்காமல் போகிறார் தடுப்பமோ நண்பரே

— சூடியே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 ஆம் நண்பன் :

நடையிலே மயங்கிறேன் நாமெல்லாம் தோல்வியோ
இடையிலே வருகின்றார் இங்கே பார் நண்பனே
தடையேதும் செய்வாளோ தயங்குதே நெஞ்சமே
விடையேதும் சொல்லடா விரைவதாய் வருகின்றாள்

— கூடியோ...

மங்கை கிளாரு வசனம்

சகோதரர்களே! ஏன் நீங்கள் அதோ போகும் பெண்களைப் பார்த்து கேலி செய்கின்றீர்கள். இறை யேசு மறைப் பணியை உலகெல்லாம் பரப்ப சேவை செய்ய வேண்டிய நீங்கள் ஏன் வீண் பொழுதைக் கழிக்கின்றீர்கள்.

சகோதரிகளே இவர்கள் விட்ட பிழைக்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.

பிரான்சிஸ் :

சகோதரி, நாங்கள் தெரியாமல் செய்த பிழையை பொறுத்துக்கொள்ள வேண்டும். தங்கள் பெயர்...

கிளாரு :

என் பெயர் கிளாரு. சகோதரிகளே! இவர்களை மன்னித்து சென்று வாருங்கள்.

பிரான்சிஸ் :

நண்பர்களே! எனது தந்தை வணிக விடயமாக, என்னை இன்று இரவு சந்திக்கச் சொன்னார். சரி, நீங்கள் போய் வாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 2

இடம் : புடவை வணிகர் பீற்றர் பெர்ணதோனின் மாளிகை.

பங்கு கொள்வோர் : பீற்றர் பெர்ணதோன் – பிரான்சீஸ்

நிலைமை :

தந்தை மகனுக்கு வணிக நுணுக்கங்களைக் கூறுகின்றார்.

தரு

இராகம்: கல்யாணி தாளம்: அடதாளம்

மெட்டு: வாரும் வாரும் நீலம் பிள்ளாய்
( தேவசகாயம்பிள்ளை நாடகம் )

பீற்றர் பெர்ணதோன் :

சேலை வணிகமே கற்பாய் — உயர்
செல்வச் செழிப்பிலே நிற்பாய்
மாலை நிறமஞ்சள் புற்பாய் — அதை
மடங்கு பலகூட்டி விற்பாய்.

பிரான்சீஸ் :

ஆடை பலதுமே கண்டேன் — தந்தை
அறிவுரை தன்னையே உண்டேன்
கூடை பொருள்களே கொண்டேன் — துயர்
குடிமது எப்போதும் அண்டேன்.

பெர்ண :

ஆசியக் கண்டத்தே பட்டு — இன்று
அழகுற அதையுமே கட்டு
பேசிய விலையுமே இட்டு — நல்ல
பேறுடை முதலையே கொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிஸ் :

கண்கவர் ஈழத்தே முத்தே — எம்தன்
கடைதனை உயர்த்துமே சொத்தே
வண்ணிற அணிகளே மெத்தே — பின்பு
வகையுடன் வணிகமே பத்தே!

பெர்ணா :

கால்தனில் கட்டுமே அணியே — எழில்
கன்னியர் விரும்புவார் மணியே!
நால்வகை யோருக்கே பணியே — மனம்
நயம்பெறப் புரிகுவாய் துணிவே.

பிரான்சிஸ் :

காளைப் பருவமே கொடையே — பெரும்
காசுகள் கொடுப்பதே உடையே!
ஏழை தரத்தினோர் இடையே — எந்தன்
எண்ணமும் அதற்கேதான் தடையே!

வசனம் :

தந்தையரே! தாங்கள் கூறிய புடவை வணிகத்தின் நுணுக்கங்களைக் கேட்டறிந்தேன். ஆனால் எனது மனம் ஏழைகளைக் கண்டதும் இரங்கிவிடுகின்றது. முயற்சிக்கின் றேன்.

## அங்கம் 3

இடம் : போர்க்களம்.

பங்குகொள்வோர் : பிரான்சீஸ், இரு நண்பர்கள், பெருஜியா நாட்டவர்.

நிலைமை :

பெருஜியா நாட்டவரும், அசிசி நாட்டவரும் போர் புரிதல். ஈற்றில் பிரான்சீஸ் சிறைப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருஜியா நாட்டுத் தளபதி

**கொச்சகம் :**

பகைவர் பலரைச் சிறையிடவே
பரந்து நிற்கும் வீரர்களே
வகையாய் அசிசி நாட்டினரை
வளைத்து நாமும் பிடித்திடுவோம்
குகையில் நீங்கள் ஒழிந்திருந்தே
குறிப்பாய் போரை நடாத்துதற்கு
மிகைவாய் விழித்து பாசறையில்
மிக்க வாள்கள் எடுத்திடுவீர்.

**வசனம் :**

போர் வீரர்களே! ஒரு இனத்தை அழித்து, இன்னொரு இனத்தை ஆக்குவதே எமது நோக்கம். பெரும்பான்மை யான பெருஜியா நாட்டவர், சிறுபான்மையாகிய அசிசி நாட் டவரை அழிக்கவேண்டும். இதில் தான் இனவொதுக்கல் ஆரம்பிக்கின்றது.

போர்வீரர்களே! போர் செய்வதற்கான ஆயத்தங்களைச் செய்வோம்.

## தரு

**இராகம் :** தோடி **தாளம் :** அடதாளம்

**மெட்டு :** இக்கடல் தனிவழி விடுவோனென்றே சொன் னாய். — மீகாமன் நாடகம்.

**தளபதி :**

காட்டினில் நீங்களும் நீட்டினில் நின்றுமே
காவல்கள் காத்திடுவீர் முறையாய்
மாட்டிய வாளுடன் தீட்டிய மேலுமே
மகழ்வதாய் எடுத்திடுவீர் நிறைவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1ம் வீரன் :**

யானைகள் தன்னுடன் சேனைகள் வந்தாலும்
யாரையும் கொன்றிடுவோம் தலைவா
வானையும் அதிரிடும் ஏனைய குன்றொன்று
வகையதாய் வைத்திடுவோம் மலையாய்.

**2ம் வீரன் :**

மல்லரை மண்ணிலே கொல்வது செய்குவோம்
மாற்றமே இல்லையடா அறிவாய்
சில்லுகொள் தேருகள் வெல்வது உண்மையே
சிரசையே கொய்திடுவோம் குறிப்பாய்.

**தளபதி :**

குன்றுகள் உச்சியில் சென்றது நீருமே
குலத்துக்காய் ஆடிடுவீர் போர் தன்னை
வென்றது கொடிகளும் இன்றது காணுதே
வேகமாய் எரித்திடுவோம் ஊர் தன்னை

**1ம் வீரன் :**

தரைதனில் மாற்றலர் விரைவுடன் வருவாரே
தாக்கியே வீழ்ந்திடுவோம் பலமாய்
இரைகளும் உண்ணவே கரைதனில் பருந்துபார்
இப்போரைச் செய்திடுவோம் நிலமாய்.

**2ம் வீரன் :**

சத்தமும் கேட்குது யுத்தமும் புரிந்திட
சண்டைக்கு ஆயத்தங்கள் செய்வோமே
கத்துது கழுகுகள் பித்தரைக் கொல்லவே
காட்டுவோம் வீரமதை மெய்யாய்.

**தளபதி வசனம்**

வீரர்களே! அதோ அசிசி நாட்டவர் வந்துகொண்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரான்சிஸ் வசனம்

வீரர்களே! எமது இனத்துக்காக, எமது இனத்தை யொதுக்க நினைக்கும், பெருஜியா நாட்டவரும் போர் புரி வோம்.

### தரு

இராகம்: அம்சத்துவணி                                   தாளம்: ஆதி

மெட்டு: அடடாபடு மூடப் பறங்கியே
( கட்டப் பொம்மன் நாடகம் )

**பிரான்சிஸ் :**

அயல்நாட்டு அந்நிய வீரனே
அச்சமின்றியே இங்கு வந்தாயோ
எயில்எல்லாம் அடித்து நொருக்கியே
எமன்புரத்துக்கு அனுப்புவேனடா
வில்லு சில்லுபோக்கி பல்லு உடைத்துநானும்
வெல்லுவேனேயுனை அறிந்து கொள்வீரே.

**தளபதி :**

பொல்லாமட சிறியதோர் சூரனே
பெருதுணிவாக துள்ளிப் பாய்கிறாய்
வில்லாலுனை அடித்து வதைத்துமே
விலாவெலும்புகள் நொறுக்கு வேனடா
இன்று, நின்று, வன்பாய், கொன்றுவுன்னுடலை
நன்று நரி கழுகு உண்ணவைப்பேனே

**1 ம் நண்பன்**

புல்லா கொடு வேங்கையும் நாமடா
புல் தரைதனில் புரட்டு வேனடா
கொல்வேன் பதவாளினுல் உன்னையே
கொக்கரித்து நீ குதித்கிருயடா
கொடிகள் முடிகள் தன்னை நொடியில் வீழ்த்தி நானும்
மடிதல் செய்திடுவேன் அறிந்து கொள்வீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1 ம் வீரன் :**

மூர்க்கா சினம் கொண்டது வாகவே
முட்டுதற்கு நீ கிட்ட வந்தாயோ
பார்ப்பாயுனை வெட்டி வீழ்த்தியே
படைகளனைத்தையும் முடிக்கி றேனடா
சிரசு கையெடுத்து, முரசு அறைந்து நானும்
அரசு அனைத்தையுமே அழித்திடுவேனே.

**2 ம் நண்பன் :**

தடியாய் மது வெறியுடன் நிற்கிறாய்
தந்திரமாகத் தப்பப் பார்க்கிறாய்
அடிப்பேன் பெரும் சவுக்கினால் நானுமே
அற்பனே உந்தன் வாயடக்கடா!

உதைகள் பலதுதந்து சதைகள் எடுத்து நானும்
கதையை முடித்திடுவேன் தெரிந்து கொள்வீரே.

**2ம் வீரன் :**

அற்பகுணம் கொண்டவன் போலவே!
ஆத்திரமாகப் பேசினாயடா
விற்போரும் ஆடவே முடியாமல்
வீழ்கிறாயடா வீணனே இப்போ!

கால்கள் மடிந்திடவே மேல்கள் படியில் விழ
வேல்கள் ஒடிந்திடவே வெற்றியும் கண்டோம்.

**மறுதரு**

**இராகம் :** தேசியதோடி **தாளம் :** ரூபகம்

**மெட்டு :** பாரினிலே கொடுங் கோன்மைகள்
(கண்டியரசன் நாடகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி :

ஆரடா நீயும் அருகிலே வந்தாய்
பாரடா உன்னை பதைத்திட அடிப்பேன்
கூரடா ஈட்டி குத்துவேன் நன்றாய்
போரடா இதுவும் பொறுத்துமே பாராய்.

பிரான்சிஸ் :

குத்துவேன் உன்னைக் குருதியே எடுப்பேன்
கத்துமே காக்கை கழுகிடம் கொடுப்பேன்
கொத்துவேன் மழுவால் கோட்டைகள் அழிப்பேன்
பெத்ததாய் நாட்டைப் பேணியே காப்போம்.

1ம் வீரன் :

ஈட்டியால் உன்னை இடித்துமே இப்போ
வாட்டுவோம் வீரா வாகையே கொள்வோம்
காட்டுவோம் நாங்கள் களத்தினில் நன்றாய்
நாட்டுவோம் சொந்த நகர்தனில் வெற்றி.

1ம் நண்பன் :

மண்ணிலே வீழ்த்தி மடக்கியே பிடிப்போம்
விண்ணதே செல்ல விடுவேனே கேளாய்
எண்ணவே முடியா எமனது புரமே
கண்டது ஏக கயவனே அறிவாய்.

2ம் வீரன் :

பருந்ததே வந்தே பகைவனே உன்னை
விருந்ததாய் உண்ண விடுவேனே பாராய்
தருகுவேன் உனக்கு தக்கதோர் அடியும்
உருவமே இல்லா உடலுமே காண்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் நண்பன் :

வலியுமே போச்சே வந்ததே மோசம்
எலியதே பொறியில் ஏறிய கதைதான்
பலிக்கடாய் ஆனேம் படுதோல்வி கண்டோம்
கலியதே பிடித்த காலமே கொண்டோம்

**தளபதி வசனம்**

வீரர்களே! இவர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு சிறைப்பட்ட பறவைபோல் அடிபட்டு நிலத்தில் கிடக்கின்ருர்கள். எமது கொடியை அதோ தெரியும் மலைக்குன்றில் ஏற்றுவதோடு இங்கே விழுந்து கிடக்கும் மூபேரையும் இழுத்துக்கொண்டு அந்தப் பாசறையில் சிறை வைத்துவிடுங்கள்.

(சிறை வைக்கப்பட்ட பிரான்சீசுக்கு அசரீதி வாக்கு கேட்கிறது.)

**அசரீதி வாக்கு**

பிரான்சீஸ்! நீயேன் மண்ணில் வாழும் மக்களிடத்தில் பரந்த மனப்பான்மையுடையவனுகவும், அன்புள்ளவனுகவும் இருக்கின்ருய். நீ மண்ணில் வாழும் மக்களிடத்தில் வைக்கும் பரந்த மனப்பான்மையினுலும் அன்பினுலும் உனக்கு கிடைக்கும் பிரதிபலன் மிகச் சொற்பமே! ஆனுல் நீயோ இறைவனிடத்தில் ஆழமான விசுவாசமுள்ளவனுகவும் அன்புள்ளவனுகவும் இருந்தால் அதற்கு கிடைக்கும் பிரதிபலன் அளவிடமுடியாது.

பிரான்சீஸ் நீ அசிசிக்கு திரும்பிப்போ அங்கு நீ செய்ய வேண்டிய பணி உனக்கு உரைக்கப்படும்.

பிரான்சீஸ் :

இறைவா! நீ உரைத்தபடி, எனது சிறை வாழ்க்கையின் காலம், முடிவுற்றதும் நான் பிறந்த பொன்னுட்டுக்குப் போகின்றேன். அங்கே! என்னை ஆட்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 4

**இடம்:** தெரு

**பங்குகொள்வோர் :** இளைஞன் பிரான்சீஸ், குஸ்டரோகி

**நிலைமை :** பிரான்சீஸ் குஸ்டரோகியைக் காணல்

## குஸ்டரோகி கொச்சகம்

வருத்தம் ஒன்றால் வாதையுற்று
வறுமை தன்னால் வாடுகின்றேன்
ஒருத்தர் வந்து இவ்விடத்தில்
ஒருநாள் உணவுக் குதவாரோ
விருந்தும் பாட்டும் ஆடலுமே
விளங்கும் இந்த நகர்தனிலே
மருந்து செய்யா நோயுடனே
மடிவை நோக்கிச் செல்லுகின்றேன்.

**வசனம் :**

இறைவா! குஸ்டரோகத்தால் வாட்டப்பட்டு நாயினும் கேடாக நடாத்தப்படும் என்னை ஏன் இன்னும் உலகில் வைத்திருக்கின்றாய்! எனக்கேன் இந்த விதியை விதித்தாய் இறைவா!

## தரு

**இராகம்:** ஆனந்தபைரவி **தாளம்:** திரிபுடை

**மெட்டு:** உந்தன் துணை தாராய்
எந்தன் துயர் தீராய்
(எஸ்தாக்கியார் நாடகம்)

1. மஞ்சவுடை மேலே! பிஞ்சுமதிக் காவே!
கொஞ்சுஇறை சேயே! மிஞ்சுமரித் தாயே!
அஞ்சும்இருள் பேயே! பஞ்சவினை நோயே!
வஞ்சகுண ஊரே! தஞ்சமெனக் காரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்தன்னையே! கரம்கொண்ட நீ
வரம் வேண்டியே! சிரம் தாழ்த்தினேன்

அன்னைமாமரி உன்னை வேண்டினேன்
என்னைக்காத்திடு வாயே!

2. மங்கைமரி தாசா! எங்கள் குல ஈசா!
கங்கை இன சீசா! செங்கைவர நேசா!
தங்க நிகர் போதா! இங்கு இறை தூதா!
பொங்கு மறை வேதா! சங்கம் வைத்த நாதா!
மனம் நோகிறேன்! தினம்வாடுறேன்!
சனம் தேடுறேன்! இனம் காத்திடு

நேரே! தேடினோர்! போரே யாடினோர்
வீரமின்றியே வாரூர்!

**வசனம்:**

எமது இனத்தை ஒடுக்க, பெரும்பான்மையான பெருஜியா நாட்டவர்கள் முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள். என்ன செய்வது... அதோ ஒரு இளைஞன் கலந்த வீரத்துடன் தலை குனிந்து வருகிறான். வீரமே வெறுத்து ஊரையே வெறுத்து உலகத்தையே வெறுத்து வந்துகொண்டிருக்கின்றான் அவன் என்னையே நோக்கி வருகின்றான். எதற்காகவெனப் பார்ப்போம்.

*(இளைஞன் பிரான்சிஸ் குஸ்டரோகியைத் தொடல்)*

**குஸ்டரோகி:**

இளைஞனே! நீ என்னைத் தொடாதே! தொட்டால் என் நோய் உனக்குப் பிடித்துவிடும்.

**பிரான்சிஸ்:**

இறைவா! பருத்த உருவத்தையுடைய கோலியாத் செருக்களத்தில் தன்னை வெல்ல ஒருவருமில்லையென இறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்புடன் இருந்தான். அந்நேரத்தில் இறைவன் தாவீது என்ற சிறுவனுக்கு மனவுறுதி கொடுத்ததினால், தாவீது கோலியாத்தை வென்றான்.

ஈசா! இந்த குஷ்டரோகியை தொடுவதற்கு மனவுறுதி தாரும்.

(பிரான்சீஸ் குஷ்டரோகியின் கையைப் பிடித்து முத்த மிட்டபின்)

**பிரான்சிஸ்:**

இறைவா! நீர் எனக்குத் தந்த மனவுறுதி தொழுநோய்க் காரனையும், தொற்றுநோய்க் காரனையும், தொடவும் துணிந்து விட்டது. நான் வெறுப்பான, கசப்பான பொருளைத் தொட்டதிலிருந்து எனது பயமும் களையெடுக்கப்பட்டதாகத் தெரி கின்றது. ஈசா! எனது மன நிறைவு பெற, அதோ தெரி யும் புனித தமியான் ஆலயத்துக்குச் செல்கிறேன். பெரிய வரே! தாங்கள் சென்று வாருங்கள்.

## அங்கம் 5

**இடம்:** புனித தமியான் ஆலயம்

**பங்குகொள்வோர்:** இளைஞன் பிரான்சீஸ்

**நிலைமை:**

இளைஞன் பிரான்சீஸ் இறைவனைப் பார்த்துத் துதிபாட, இறைமகன் யேசு அவருடன் பேசுகின்றார்.

**கலித்துறை**

ஆதியில் இறைவன் தன்னால் அகிலமும் தோற்று வித்தே
சோதியும் மதியும் காற்றும் சோலைகள் ஆக்கி விட்டே
பாதியில் ஆதாம் எவாள் பல்லுயிர் படைத்த பின்னே
ஓதிய வார்த்தை ஒன்றை ஒருநாள் காக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசனம் :**

இறைவா! மண்ணுயிர்களுக்காக தன்னுயிரைக் கொடுத்த தேவே! ஆதி மனிதர்களான ஆதாம் ஏவாள், உமது தந்தையின் சொல்லைக் கேட்காததினால் நாம் இந்த மண்ணுலகில் அவலப்படுகின்றோம்.

**அசரீரி :**

பிரான்சீஸ்! பிரான்சீஸ்! நீ உனது ஆசையை நிறைவேற்ற விரும்பினால் உன்னை நீ முற்றாக மாற்றிக்கொள்ள வேண்டும். நீ முன்பு விரும்பிய எல்லாப் பொருட்களிலும் வெறுப்பைக் காட்டவேண்டும் அதன்பின் தாழ்ச்சி! தனிக் குடித்தனம். தரித்திரம் என்பன உன்னை ஆட்கொள்ளும் நீ முன்பு விரும்பியவைகளெல்லாம் கசப்பாகத் தோன்றும் உன்னில் முன்பு நிரம்பியிருந்த அச்சம், பயம் என்பதெல்லாம், துணையாகவும் சொல்லமுடியாத இன்பமாகவும் மாறும்.

**பிரான்சீஸ் :**

தேவரீர்! எனக்காக சிலுவையிலிருந்துகொண்டு பேசுவதைக் கேட்டேன். நான் என்ன தவம் செய்தேனோ!

**அசரீரி :**

பிரான்சீஸ்! பிரான்சீஸ்! நீ போய் எனது வீட்டைத் திருத்து அது அழியும் நிலைக்கு வந்துவிட்டது.

**பிரான்சீஸ் :**

இறைவா! உனது வார்த்தையைக் கேட்டேன் அதன்படி நடப்பேன் எனது வாக்களிப்பு இதுவே!

**தரு**

**இராகம் :** **தாளம் :**

**மெட்டு :** தேவதூதனைக் காணல் — ஞானசௌந்தரி

1. அன்னைமரி பெற்றுள் உம்மை
என்னையுமே மீட்பதற்காய்
— காருமே துயர் தீருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மங்கைமது பொன்னும் விட்டேன்
செல்கை தனைக் கூப்புகின்றேன்
— பாருமே என்னை நீருமே!

3. கள்வரிரு பக்கம் நின்றார்
முள்முடியை மாட்டிவிட்டார்!
— வாருமே! எங்கள் ஊருமே!

# அங்கம் 6

இடம் : பீற்றர் பேர்ணதோன் மாளிகை

**பங்கு கொள்வோர் :** பீற்றர் பேர்ணதோன், மனம் மாறிய பிரான்சிஸ், வழிப்போக்கன்.

**நிலைமை :** மனம் மாறிய பிரான்சிஸ் பிச்சைக்காரர்களுடனும், தொழுநோய்க் காரருடனும் நிற்பதையும், கூடாத உணவுகளையும் உண்பதையும் வழிப்போக்கன் தகப்பனுக்குக் கூற, தகப்பன் மகனை அழைத்தல். மகன் முற்றும் துறந்து எல்லாவற்றையும் கழற்றிக் கொடுத்து, தேவபணிக்காகச் செல்லல்.

**வழிப்போக்கன்:**

வணிகப் பெருந்தகையே! தங்கள் மகன் தொழுநோய்க் காரர்களுடனும், பிச்சைக்காரர்களுடனும் சேர்ந்துகொண்டும், வீடு வீடாய் இரந்து உண்டு கொண்டு வருகின்றான். இது தங்கள் கோத்திரத்துக்கே அவமானமாகும். இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் தங்கள் குடும்ப அந்தஸ்து, மானமெல்லாம் காற்றாய்ப் பறந்துவிடும்.

**பேர்ணதோன் :**

இடேய்! ஏவலர்களே! அந்தப் பைத்தியக்காரனுக்கு முன்பு எவ்வளவோ சொல்லியும், வியாபாரத்தில் நாட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லாமல் விசர் கூட்டங்களோடு சேர்ந்துகொண்டு திரிகின்றான். அவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கவேண்டும். அவனை இருட்டுள்ள நிலவறைக்குள் பூட்டிவைத்தும், அவன் அதை உடைத்து தப்பியிருக்கிறான். சரி... ஏவலரே! அவனைச் சங்கிலியால் பிணைத்து கட்டி இழுத்து வாருங்கள்.

**ஏவலர் :** அப்படியே.

( ஏவலர்கள் மனம் மாறிய பிரான்சிசை சங்கிலியால் பிணைத்து இழுத்து வந்து தகப்பன் முன்னால் விட்ட பிறகு அவிழ்த்து விடுகிறார்கள் )

**பிரான்சிஸ் :**

தந்தையே! கள்வனைக் கட்டி இழுப்பதைப்போல் என்னை ஏன் கட்டி இழுத்து இங்கு கொண்டுவரச்சொன்னீர்கள்.

தரு

**இராகம்:** கரகரப்பிரியை **தாளம்:** ரூபகம்

**மெட்டு:** "உன்பத்தா எங்குற்றானோ துறைபதி..."
(எஸ்தாக்கியார் நாடகம்)

**பெர்ணதோன் :**

எண்ணினேன் உன்னைப்பற்றி எடே மூடா
ஏனிந்த கொள்கை யடா!
மண்ணிலே எந்தனது அந்தஸ் தோடு
மானமே போச்சு தடா!

**பிரான்சிஸ் :**

போரிலே தோற்றதினால் மாற்றார் என்னை
பொல்லாத சிறையில் வைத்தார்
ஊரிலே வருவதற்கு யேசு நாதர்
உயிரையே திருப்பித் தந்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெர்ணதோன் :

பஞ்சமே பிடித்திருக்கும் ஏழை வீட்டில்
பந்தியே! இருக்கக் கண்டார்!
கொஞ்சமே மூளையில்லை இங்கு நானும்
கொல்லுவேன் உண்மை தானே!

பிரான்சிஸ் :

செல்வங்கள் அத்தனையும் விட்டே நானும்
செல்லவே ஆசை கொண்டேன்!
இல்லங்கள் பொருளாடை எல்லா மின்றி
ஈசனூர் பாதை போவேன்.

பெர்ணடோன் :

ஆயரே! அறிவுரைத்தும் இந்த வேடன்
அடங்காத குணமும் கொண்டான்
சேயேநீ இல்லையென்ற எண்ணம் ஏற்று
செம்மையாய் பூவில் வாழ்வேன்!

பிரான்சிஸ் :

யேசுதான் ஏற்றபின்பு தந்தை மைந்தன்
என்பதே விட்டு விட்டேன்
வீசுவேன் ஆடையணி மண்ணில் இன்றே
விடைபெற்றேன் வருகின் றேனே!

பிரான்சிஸ் வசனம்

''இன்றுவரை நான் உங்களைத்தான் தந்தையென்று அழைத்தேன். ஆனால் இனிமேல் உண்மையாகவே, இறைவனைத்தான் தந்தையென்று அழைப்பேன். ''விண்ணகத்திலுள்ளவரே எங்கள் பிதா. அவர் மூலமாக எல்லா நன்மைகளும் கிடைக்கின்றன. அவரிலேயே எல்லா நம்பிக்கைகளையும் வைத்துள்ளேன்''. நான் வருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிரான்சிஸ் தனது ஆடையணிகளை எடுத்து வீசிவிட்டு போய்விடுகின்றான்.)

அவர் போனபின்......

**பெர்ணடோன் :**

இந்த மடையனைத் திருத்துவதற்காக எவ்வளவோ கஸ்டப்பட்டேன். சொற் கேட்காதவன் எனது பிள்ளையில்லை. ஆடை அத்தனையும் களைந்துவிட்டு வெறுங்கையோடு செல்லுகிற இவனை, அவன் நம்புகிற ஆண்டவனும், திருச்சபையும் பார்த்துக்கொள்ளட்டும்.

# அங்கம் 7

**இடம்:** தெரு

**பங்குகொள்வோர்:** இளைஞன் பிரான்சிஸ்

**நிலைமை:** தனது சபைக்கு ஆட்களைச் சேர்த்தல்

இளைஞன் பிரான்சிஸ் மனம்மாறி மக்களுக்கு இறையேசுவின் மறைகள் பற்றி விளக்குகின்றார்.

**வண்ணத்தரு**

**இராகம்:** பைரவி **தாளம்:** ஆதி

**மெட்டு:** பானுலாவிந்த நகர் தானுமே
சொந்தமென நானுமே...
(தேவசகாயம்பிள்ளை நாடகம்)

பேசுவேன் அண்ணல் புகழ்
யேசுவை எண்ணி நானும்
வீசுதே தென்றல் காற்று
காசுகள் இல்லா நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியே! தந்ததோர் ஈசனும்
பாவிகள் காக்கின்ற நேசனும்
சாவிலே வென்றதோர் பாசனும்
பூவிலே நின்றெமை மீட்பாராம்

இல்லல்கள் அறிந்திட
செல்வங்கள் துறந்திட
நல்லதை நாட்டிட
சொல்லுவேன் அவர்பணி

போதனை செய்திட
சாதனை புரிந்திட
கீதங்கள் பாடியே
நாதனை நாடுவேன்

... ( ...பேசுவேன் )

நானுமே கொண்டேன் கோலம்
கோனுமே கொண்டேன் ஞாலம்
வானுமே காட்டும் நீலம்
தேனுமே கசந்த காலம்

தொட்டிலே மெத்தையாய் கொண்டவா
எட்டிலே நாமம் பூண்டவா
வெட்டவே ஏதோது தேடவே
கொட்டத்தை அடக்கிய பாலனே

மஞ்சத்தை மறந்திட
வஞ்சியர் அகன்றிட
பஞ்சமே தன்னையே
தஞ்சமாய் கொள்வேனே

மோதிய துன்பமும்
பாதியில் பயந்திட
வீதியில் நிற்போரே
சேதியை கேளுங்கோ

பேசுவேன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசனம்:**

தெருவினூல் போகும் இருபாலரே! நீங்கள் அஞ்ஞான இருட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் மெஞ் ஞான வெளிச்சத்தைக் காண என் பின்னூல் வாருங்கள்.

**வழியில் போன ஒருவர்:**

நண்பா! யேசு வேதத்தைப் போதிக்கும் இவர் பின்னூல் நாமும் போவோம். இவரைப்போல் துறவறத்தைப் பூணு வதற்கு முற்றும் துறந்து இவர் பின்னூல் பின் செல்வோம்.

**வழிப்போக்கன்:**

இந்த இளைஞன் வணிகப் பெருமகன் பீற்றர் பெர்ண தோனின் மகன். இவனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது போல் காணப்படுகின்றது.

பஞ்சணை மெத்தை, பால்ரசமருந்தி, பாங்கியர் புடைசூழ பல வகை அணி ஆடை அணிய வேண்டியவன் பிச்சைக் காரர்களையும், தொழுநோய்க்காரர்களையும் கூட்டிக்கொண்டு திரிகின்றுன். வாங்கோடா! இவனது தகப்பனுக்கு இதைப் பற்றிச் சொல்லுவோம்.

**நிற்போர்:**

சரியாய் முத்திப் போச்சு! என்னமோ? உழறுகிறுன். வாங்கோடா நாமும் பேரவோம்.

## அங்கம் 8

**இடம் :** பாப்பிறை இல்லம்.

**பங்குகொள்வோர் :** 3 ம் இன்னசன்ற் பாப்பரசர், ஆயர்

**நிலைமை :**

3 ம் இன்னசன்ற் பாப்பரசர், பேராலயமொன்றும் மணிக் கூட்டு கோபுரமும் இடிந்து விழுவதாகக் கனவு காண்கிறுர். இது திருச்சபை விழுவதைப் போல் அவருக்குத் தென்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. அத்துடன் அசரீதி வாக்கும் கேட்கிறது. பின்பு தன்னிடம் வந்த தனக்குத் துணையாக விருந்த ஆயருக்கு இதை விழக்குகின்றார்.

(கனவு முடிந்ததும்)

**அசரீதி :**

பாப்பரசே! பாப்பரசே! திருச்சபை ஆட்டங்கண்டுகொண்டிருக்கின்றது. அதைக் காப்பாற்ற ஒருவர் வருவார். (இரு முறை)

அசரீதி முடிந்ததும்

**ஆயர் :**

பாப்பிறையே! ஏதோ! கனவுகண்டதைப் போல் இருக்கின்றீர்கள். அதை ஓதினால் நல்லது இறையே!

தரு

இராகம்: ஆனந்தபைரவி — தாளம்: ஆதி

மெட்டு: தங்கம்போல் அங்கமான தம்பியே
(எஸ்தாக்கியார் நாடகம்)

**பாப்பரசர்:**

ஓதுவீர் வென்றுரைத்த நேயரே — நானும்
ஒன்றுதான் இயம்புகின்றேன் கேளுமே
பாதிரா தன்னிலொரு கனவுமே — எந்தன்
படுக்கைமேல் கண்டுவிட்டேன் ஆயரே.

**ஆயர்:**

படுக்கைமேல் கண்டகனு தன்னையே — இங்கு
பாங்காக உரைத்திடுமென் தந்தையே
சடுதியாய்ச் சத்தமதைக் கேட்டுமே — நானும்
சட்டென்று எழுந்துவிட்டேன் விந்தையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாப்பரசர்:**

இறையனுர் ஆலயமே இடிந்ததே — அந்த
இசைமீட்கும் கோபுரமே சரிந்ததே
அறைகின்றேன் உண்மைநிலை கேளுமே — எங்கள்
அவலத்தைப் போக்கிடுவார் ஒருவரே

**ஆயர்:**

ஆடலே பாட்டிசையே காணுதே — இந்த
அவனியே அழிகிறதே உண்மையே
கூடவே இனப்பகையும் ஓங்குதே — எம்தன்
குடிகளால் திருச்சபையும் சாகுதே.

**பாப்பரசர் :**

வீழ்கின்ற திருச்சபையை காக்கவே — ஞான
வித்தொன்று வருவதுமே திண்ணமே
ஆழ்கின்ற என்கரமும் நடுங்குதே — நீண்ட
அழிவையே போக்கிடுவார் அவருமே!

**ஆயர் :**

சிலுவையில் சிந்தியதோர் இரத்தமே — சிந்தை
சிறந்தோரை ஆக்கிடுமே மண்ணிலே
வலுவதாய் எத்திசையும் பரவுமே — தேவ
வார்த்தைகள் நிறைவுபெறும் காலமே!

**வசனம்:**

பாப்பிறையே! மக்கள் இறைவனை அறியாமல் தங்கள் எண்ணப்படி நடக்கின்ருர்கள். பத்துக்கட்டளையை சீனுமலையில் கொடுத்த இறைவன், மக்களைத் திசைதிருப்புவதற்கு ஒரு பெரும் ஞானியை அனுப்புவார். நீங்கள் பயமின்றி இருங்கள் இறையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 9

இடம்: தெரு

**பங்குகொள்வோர்:** மங்கை கிளாரு, தோழி

**நிலைமை :** மங்கை கிளாரு துறவறம், பூணுவதற்காக பிரான்சீஸ் அசிசியாரை காணவரல்.

**இராகம் :** பரசு **தாளம் :** அடதாளம்

**மெட்டு :** மாசீர் புவி மீதினிலே...
(எஸ்தாக்கியார் நாடகம்)

**கிளாரு :**

திங்களை யுடையாகவே கொண்டவள்
எங்கள் திருமரியாம் — அந்த
மங்கையோர்குல மாதாவை நானுமே
செங்கையால் கும்பிடுவோம்!

**தோழி :**

மண்சுகம் அடியோடதாய் விட்டவர்
எண்ணி நடந்திடுவேன் — ஞானப்
பண்ணதில் பாடி பாவியோர் தேடுவார்
அண்ணல் பிரான்சீசே!

**கிளாரு :**

தொட்டினில் முடியரசும் கண்டனர்
கட்டிலு மில்லையங்கே — யேசு
விட்டதோர் பணிசெய்யவே நாமுமே
எட்டி நடந்திடுவோம்.

**தோழி :**

கரமதில் செபமாலையே பூண்டவள்
வரமதை வேண்டிடுவோம் — எம்தன்
பரனவர் தன்னின் மாண்மையே கூறவே!
புரமது உள்ளிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாரு :

கன்னிகை பலர்சேர்த்தது நாமுமே
சொன்ன வழிநடப்போம் — அந்த
முன்னோரின் பிழைகளையவே பூவினில்
பின்செயல் ஆற்றிடுவோம்.

தோழி :

திருச்சபைதனை ஆக்கிய மீட்பரின்
அருளதைப் பெற்றிடுவோம் — எம்மை
எருவெனவாக்கி மாதர்கள் கூடியே
விருப்புடன் செபத்திடுவோம்.

கிளாரு வசனம்

சகோதரி! அதோ! தன்னையே எருவாக்கி திருமறையைப் பரப்புகின்ற பெரும் ஞானி பிரான்சிஸ் அசிசியார் ஆச்சிரமம் கிட்டிவிட்டது விரைவாகவா

# அங்கம் 10

இடம் : பிரான்சிஸ் அசிசியார் ஆச்சிரமம்.

பங்குகொள்வோர் : பிரான்சிஸ் அசிசியார், கிளாரு, தோழி.

நிலைமை :

மங்கை கிளாரு தானும், தனது சகாக்களும், கன்னியர் துறவறத்தில் பூணிவதற்கு, அசிசியாரிடம் ஆசி கோரிவரல்.

பிரான்சிஸ் அசிசியார் கவி

கரமது கூப்பி என்னை கனமது செய்யும் பிள்ளாய்
சிரமது தாழ்த்தி நீயும் சிந்தனை புரிவ தேனோ!
புரமது விட்டு இந்த புண்ணிய இடத்தைக் காண
பரனது அருளால் வந்தாய் பகரது உந்தன் செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசனம் :**

சகோதரியே! நகர்விட்டு, இந்த சந்நியாச மடத்துக்கு வந்த சேதியை ஓதுவாயாக.

**கிளாரு ஆசரியம்**

சேதியை இங்கு செப்பெனக் கேட்ட
சேயிவள் வணிகரின் மகளே!
செல்வ மெல்லாம் செபத்தினில் மறந்து
செகமதின் மாயையும் அறிந்தேன்

வீதியில் கண்ட விபரமும் வேறு
விரைந்தது மனமது வேறில்
வித்தகர் நீயும் விளக்கிடும் பணியை
விண்ணகத் தேவனும் அறிவார்.

ஆதியில் ஏவாள் அரிவையின் பிழையால்
அனைவரும் அடைந்தது துன்பம்
அக்குறை மண்ணில் அறிந்தது நானும்
அண்ணலை அடைக்கலம் புகுந்தேன்

மேதினி தன்னில் மெல்லியர் சேர்ந்து
மெத்துயர் தொண்டுகள் புரிய
மேதைகள் போற்ற மேன்மைகள் பெறவே
மேவெழில் ஆசியும் தருவீர்!

**வசனம்:**

பெரியீர்! நான் துறவற வாழ்வில் புகுவதற்கும் மாதர்களுக்கான துறவிகள் சபையை ஸ்தாபிக்கவும் எனக்கு ஆசி தாரும்.

**பிரான்சிஸ் அசிசியார்:**

எழுந்திரு பிள்ளாய்! ஆசி தந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : லாவணி  தாளம் : ரூபகம்

மெட்டு : என்னரிய அன்னை நிலை ஏதோ
(எஸ்தாக்கியார் நாடகம்)

பிரான்சிஸ் ;

மங்கைகுல மாமணியே! பெண்ணே! — யேசு
மறைப்பணிகள் எங்களது மண்ணே!
தங்கநிகர் சேவையிது! எண்ணே! — இந்த
தரணியிலே உன்புகழ்தான் விண்ணே!

கிளாரு :

மக்கள்குலம் திருத்துதற்கு உரையே! — இப்போ
மாணிடர்கள் கேழ்க்கைதான் தரையே!
திக்கெல்லாம் சீடர்களின் நிரையே! — உந்தன்
திட்டமெல்லாம் ஏற்றிடுவார் துரையே!

பிரான்சிஸ் :

பொன்னையுமே துறந்துவிட்ட மணியே — போலி
பொறைதனிலே செய்திடுவாய் பணியே!
என்னையுமே மிஞ்சுவிட்ட துணிவே! — இந்த
எழில்களெல்லாம் அழிந்திடவே அணியே!

கிளாரு :

ஆசியுமே பெற்றுவிட்டேன் இன்றே — இனி
அரிவைகளைச் சேர்த்திடுவேன் நன்றே !
காசினியோர் கூடிடுவார் மன்றே — உத்தன்
கருத்துக்களும் ஏற்றிடுவார் அன்றே !

கிளாரு வசனம்

பெரியீர் ! அழகுள்ள அசிசி நகரில், கயல்களையும், குயில் களையும், மயில்களையும், எயில்களையும், அளிகளையும், கிளிகளை யும் ரசித்துக் கொண்டிருந்த நீங்கள், இப்போது இறைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் புகழ்பாடி, ஈசனை ரசித்துக் கொண்டிருக்கின்றீர்கள். தங்களைக் காணும்போது இரண்டாம் கிறிஸ்துவைப் பார்ப்பது போல் தென்படுகின்றது.

**பிரான்சிஸ் அசிசியார் :**

சகோதரி கிளாரு! நான் நாளை எகிப்து தேசம் சத்திய வேதம் போதிப்பதற்காகப் போகின்றேன். நீரும், உமது சகாக்களும் அசிசி நகரிலிருந்து இன ஒற்றுமைக்காகவும், ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காகவும் விசேடமாக பிரார்த்தனை செய்யவும் போய்வா...

# அங்கம் 11

இடம் : 3 ம் இன்னசன்ற் பாப்பரசர் இல்லம்.

**பங்குகொள்வோர் :** 3ம் இன்னசன்ற் பாப்பரசர், ஆயர், பிரான்சிஸ்.

**நிலைமை :**

பிரான்சிஸ் அசிசியார் சபையின் சட்டதிட்டங்களை ஏற்றுக் கொள்ளும்படியும், 3 ம் இன்னசன்ற் பாம்பரசரிடம் அங்கிகாரம் கோருதல்.

தரு

இராகம் : கீதவாணி     தாளம் : திரிபுடை

மெட்டு : மதியற்றிடுமிற் பதி... (விசயமனோகரன் நாடகம்)

**பாப்பரசர் :**

இன்று எமது நாட்டில் வாழுவோர்
  இறைவன் தன்னையே மறந்துவிட்டனர்!
கொன்று கொலைகள் சூது வாதுமே
  கொள்கை யாகின்றார் — அவமான
    மாகுதே பாரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் :

பத்துக் கட்டளை மனதில் வையாமல்!
பலபேர் மண்ணிலே பாவி யாகிருர்!
சொத்து மனைகள் மெத்தச் சேர்ந்திட
சொல்வார் பொய்களே — அவராயே!
தீமையாகுதே!

பாப்பரசர் :

கனவில் நானும் கண்ட காட்சியே !
கவலை யாகியே நெஞ்சம் நோகுது!
சனங்கள் பலரால் கொள்கை மாறியே
சமரும் தோன்றுதே ! — இதை நாமும்
கண்ணுல் காண்கிருேம்.

ஆயர் :

இறைவன் அருள ஒருவர் வந்துமே
இன்னல் தீர்க்கவே இங்கு வருவார்
குறைகள் களைய குலமே ஓங்கவே
குருக்கள் தோன்றுவார் — இவைகளே
நடக்குமே பின்பே

பணியாளர் வசனம்

பாப்பிறையே ! ஒரு துறவியொருவர், காவியுடையுடுத்தி தங்களைப் பார்க்க வந்திருக்கின்ருர்.

பாப்பரசர் வசனம்

சரி ! வரச்சொல்.

விருத்தம்

பாப்பிறை :

காவியே அணிந்துகொண்டு கனமும் செய்யும்
காளையரே உன்னுடைய கருத்தைக் கூறும்
பாவியரே மலிந்திருக்கும் பாரில் இப்போ
பணியதைததான் புரிவதற்கு பரமன் விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆயர் :**

மேவியதோர் மதத்தொண்டு மேலும் செய்ய
மேதினியில் வந்ததோர் மேதையோனே
ஆவியிலே வந்ததோர் அண்ணல் யேசு
அவர்பேரால் தந்திட்டேன் ஆசிதானே!

**பாப்பரசர் வசனம்**

துறவியே! நீர் ஏன் இங்கு வந்தீர் உனது வேண்டுகோளைச் சாற்றுவாயாக.

**பிரான்சிஸ் அசிசி அகவல்**

சாற்றிடு வென்றே சபைதனில் கேட்ட
போற்றிடு பாப்பே புகல்வது கேளீர்

வணிகரின் மகன்நான் வசதியும் உண்டே
பணியது புரிய பரமனும் கேட்டார்

ஆண்டவர் என்னை அழைத்தது சொன்னேன்
வேண்டிய பிறகே வெறுத்தது உலகே

திசைபல சென்றே திருச்சபை மீட்க
கசையடி பட்ட கடவுளும் விட்டார்

**பிரான்சிஸ் அசிசியர் வசனம்**

பாப்பிறையே அணிகள் பல கொண்டதும் பணியாட்கள் பலதுடையவரான வணிகர் பீற்றர் பேர்ணடோவின் இரண்டாவது மகன் நான். இறைவன் என்னை புனித தமியான் ஆலயத்தில் நேரில் கண்டு உடைந்த ஆட்டம் காணும திருச்சபையை புனருத்தாரணம் செய்யும்படி சொன்னார். அதன்படி துறவறத்தைப்பூண்டு சகோதரத்துவத்தில் பேரின்பம் கொண்டு பணியாற்றுகின்றேன். நான் நிறுவியிருக்கும் சபையின் சட்டதிட்டங்களை அங்கீகரித்து ஆசிவேண்டி இங்கு நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராப்பரசர்

எல்லாம் வல்ல இறைவன் பெயரால் உமது பணி நாடுகள் ஏடுகள், வீடுகள் எங்கனும் பரவி பிரகாசிக்கவும் மூன்று ஆணிகளிலே தொங்கி மூவுலகத்தை இரட்சித்த யேசு பெருமானின் போதனை பாரெல்லாம் பரவ ஆசீர் தருகின்றேன். அதோடு உமது சபையின் சட்டதிட்டங்களையும் அங்கீகரித்தேன். சந்தோசஷமாகப் போய்வா.

# அங்கம் 12

**இடம்:** *சீரியா தேசம்*

**பங்குகொள்வோர்:** *சீரியா அரசன் சுல்தான் மலிக் இல் கமில், மந்திரி, சேனாதிபதி.*

**நிலைமை:** *சீரியா அரசன் சுல்தான் மாலிக் இல் கமில் (Sultan Malic – el Kamil) தனது மந்திரி சேனாதிபதிகளுடன் நாட்டு வளம்பற்றி உரையாடுதல்.*

**மந்திரி வரவு**

**இராகம்:** *அடாணா* **தாளம்:** *ஆதி*

**மெட்டு:** *அத்திசூழ் பூவுலகினை... (எஸ்தாக்கியார்)*

1. *பாலைவனம் என்றுரைக்கும்*
*கோலநகர் தன்னினுக்கு*
*சாலைவழி ஓரமாக*
*சீலனிடம் போவேன்.*

2. *மண்முகில்சேர் வளமுடைய*
*கண்கவர்கொள் சீரியாவின்*
*வண்ணமுறு புரியழகை*
*அண்ணலிடம் சொல்வேன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நதிகள்பல கொண்டவந்த
பதிதனையே ஆளுகின்ற
அதிபதியாம் அரசனிடம்
கெதியதுவாய்ச் செல்வேன்.

## சேனாதிபதி வரவுத் தரு

இராகம்: மோகனம் தாளம்: அடதாளம்

மெட்டு: ஓடி அடவி இடமே காப்பு
(மனம்போல் மாங்கல்யம் நாடகம்)

1. காலை பாலை வனத்தில் — அழகுறு
சோலை மலர்கள் பூக்கும் — விலையுறு
வேலை முத்துவதை கோலமுடியணிந்த
மூலை நான்கும் காக்கும் தளபதி நானே!

2. பாரில் போரில் என்னை — பகைவரும்
நேரில் மோது வாரோ — விரைவுறு
நீரில் கப்பலுடன் தேரில் கொடியுடைய
ஊரில் மதிப்புடைய வீரனும் பாரீர்!

3. பரிகள் நரிகள் உலவும் — பயமுறு
அரிகள் கரிகள் நிலவும் — உரைத்திடு
பெரிய பகைவர்தனை தெரிந்து கொல்வதற்கு
உரிய மன்னனிடம் உவப்புடன் செல்வேன்.

## சிரியா அரசன் வரவுத் தரு

இராகம்: சங்கராபரணம் தாளம்: அடதாளம்

மெட்டு: அகிலமும் புகழுமொய்கார உத்தமன்
(கண்டியரசன் நாடகம்)

1. தேரோடு நில்கின்ற வீரர் ஓடுவார்!
பேரோடு வெல்கின்ற தீரர் நாடுவார்!
மாரோடு கொல்கின்ற மாதர் ஆடுவார்!
போரோடு செல்கின்ற நாதர் பாடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியில் உயர்வுடைய முடிகள் பலதுடைய
கொடிகள் பறக்கவிடும் அரசனும் நானே!

2. நீட்டிலே துணியிலே பிறைகள் காட்டுமே
நாட்டிலே மணிகளோ நிறைந்து வாட்டுமே
கூட்டிலே அணிலுமே உறைந்து ஓட்டமே
வீட்டிலே வணிகரே திறைகள் ஈட்டுமே

விண்டம் அதிரப்பல சண்டை பலது செய்த
கண்டம் தனையுடைய காவலன் நானே.

3. யானையே வழியிலே குடைகள் தாங்குமே
சேனையே கழிப்பிலே நடைகள் ஓங்குமே
தேனையே அளிகளோ உடைத்து நீங்குமே
வானையே கிளிகளோ அடைந்து தூங்குமே

மாதர் வணங்கிடவே பாதம் பணிந்திடவே
சீதமணிக் குடைக்கீழ் அரியணை செல்வேன்

அனு

பிறைகொடிகொள் செங்கோல்
செலுத்தி அரசாள்வேன்

சேனாதிபதி சந்தக விருத்தம்

1. அண்டர்கள் போற்றிடும் அரியணை தன்னுடன்
அதிபல ஆட்சி யுமே!
அளியிசை பாடிட ஒளிமுடி ஆடிடும்
அடல்மிகு கொற்ற வனே!

2. மண்டலம் பிடித்திட மாற்றலர் வந்தது
மாபகை தொடுத்த னரோ!
மருவலர் எவருடன் பொருதது செய்திட
மன்னவர் அழைத்த னிரோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விண்டலம் எங்கணும் சிரியர் எங்களின்
விறல்தனை அறிய மாட்டார்!
விக்கிர மனவுடை உக்கிர மழுவுடை
விரைவது உரையும் செய்வீர்.

தரு

இராகம் : பரசு — தாளம் : அடதாளம்

மெட்டு : கலைமதி நிகரான எழில்முக...
(மரியதாசன் நாடகம்)

அரசன் :

மதியதுவுரை மந்திரியே இப்போ
மாநகரது மாண்பையே கூறும்
அதிபதியென ஆற்றலே கொண்டவா
ஆள்பலத்தி னப்பையே ஓதும்

மந்திரி :

ஆறுகள்பல பாய்வதால் எங்கணும்
அரிவையரது நெஞ்சமே பொங்கும்!
சாறுகொண்டதோர் கனியூறும் தேனது
சமுத்திரம தாய்காணுமே பாரீர்

சேனாதிபதி :

படைபுரங்களும் வெற்றியே தருவது
பார்த்திபாவதில் கவலையும் வேண்டாம்
எடையதனையும் போடாதே இன்றது
எங்களின் கொடி பறக்குமே பூவில்!

அரசன் :

இறையவர்நபி உரைத்திட்ட வசனங்கள்
இயங்குதோ வெனநயமுடன் சொல்வாய்
திறையதைச் சிலர் தீர்க்காமல் உள்ளவர்
திசையனைத்தையும் திட்டமாய் உரைப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரி :

பள்ளிமுன்றலில் பாவோதும் லெப்பைகள்
 பகலிரவுகள் ஒழுங்காகச் செய்வார்
துள்ளிசெய் எழில் மழலையோர் கூடமும்
 துப்புரவுடன் நடக்குமே மன்னு!

சேனுதிபதி:

படையணிகளும் முறையாக இருக்குது
 பயநமக்கினி வேண்டாமே வேந்தே
விடையதையுரை விபரமே சொன்னேம்
 விளங்குதேயுன் புகழெல்லாம் விண்ணிலே

சிரியா அரசன் வசனம்

எனது மதிப்பிற்குரிய மந்திரியே! தளகர்த்தனே! எனது நாட்டின் வளங்களை அறிந்து அதிகம் மகிழ்ச்சியானேன். எனது தேசத்தில் அன்னியர் முக்கியமாக வெள்ளையர் புகுந்து நாட்டை பாழடையச் செய்யாமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள். அப்படிப் புகுந்தால் சிரியாவின் பேரரசன் "சுல்தான் மலிக் இய் கமால்" என்ற பெயர் காற்றில் பறந்துவிடும். சரி சென்று வாருங்கள்.

## அங்கம் 13

இடம் : பிரான்சிஸ் அசிசியார் ஆச்சிரமத்தின் ஒரு பக்கம்.

பங்கு கொள்வோர் : பிரான்சிஸ் அசிசியார், பறவைகள்.

நிலைமை : பிரான்சிஸ் அசிசியார் சிரியா தேசம்போவதற்கு போவதற்கு முன்பு, பறவைகளுக்கு உபதேசம் செய்துவிட்டு பறவைகளிலிருந்து விடை பெறுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசனம்:**

பறவையினங்களே! நான் உங்களை விட்டு சீரியா தேசத்துக்கு செல்லப் போகின்றேன்... அதற்குள்... இதோ கேளுங்கள்.

**இராகம்:** தேசியதோடி **தாளம்:** ஆதி

**மெட்டு:** நவரெத்தின மணிபெற்ற...
(எஸ்தாக்கியார் நாடகம்)

1. புள்ளியே! தனைக்கொண்ட
புறாவின் கூட்டமே!
கள்ளமே! மனத்திலில்லை
கருத்தே கேளீர்!
வள்ளலாம் யேசுவுக்கு
வாழ்த்துக்கள் கூறுதற்கு
உள்ளதாம் அன்புடனே
உடனே! வாரீர். — புள்ளியேதனைக் கொண்ட

2. கொஞ்சமே! தூமிருந்து
கோமகனுர் தொழுவதற்கே
குஞ்சோடு வந்திடுவீர்
குருசே! பாரீர்!
நெஞ்சமே! மகிழ்ந்திருந்து
நெடுநாட்கள் வாழ்ந்திடுவீர்!
அஞ்சுமே காயத்திலும்
அர்த்தமே! உண்டு!

**வசனம் :**

அருவிகளையும், குருவிகளையும் உருவாக்கிய இறைவன் — உங்களுக்கு மட்டும், பூரண சுதந்திரத்தை தந்தான். மனிதனுக்கு சுதந்திரம் மறுக்கப்படுகின்றது.

வானத்துப் பறவைகளே! வள்ளலாம் யேசுவை வாழ்த்துங்கள். எனது ஆருயிர் நண்பர்களே! நான் சீரியா தேசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதற்கு தீர்மானித்துள்ளேன். நான் வருமட்டும், நீங்கள் கவலையின்றி இருங்கள்.

## அங்கம் 14

**இடம்:** தெரு

**பங்குகொள்வோர் :** கிளாரு

**நிலைமை :** மங்கை கிளாரு கன்னியருக்கான துறவற அமைப்பை அமைத்து வேறு கன்னியர்களைச் சேர்த்தல்.

**மெட்டு :** அங்கே பாராய் கொங்கரோசா
( விசயமனோகரன் நாடகம் )

**இராகம்:** செஞ்சுருட்டி **தாளம் :** ரூபகம்

**கிளாரு :**

இங்கே வாரும் நங்கை மாரே!
மங்கை பின்னாலே — நாங்கள்
செங்கை கூப்பி தங்க யேசு
சங்க மாகுவோம்

**தோழி :**

பெண்கள் தொண்டு கண்கள் போலே
மண்ணில் உண்மையே — உங்கள்
எண்ணம் விட்டு வண்ணம் நீக்கி
அண்டி வாருங்கள்

**கிளாரு :**

இல்லம்விட்டு கொல்லும் மாயை
அல்லல் நீக்குங்கள் — நாமும்
செல்லும் பாதை சொல்வோம் இப்போ
நல்லாய் கேளுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி :

இறைவன் சேவை முறையாய் நாமே
அறைவோம் இப்போதே! — அதை
நிறைவு செய்ய கறைகள் போக்க
மறையில் சேருமே!

கிளாரு வசனம் :

சகோதரியே! எமக்கு பின்னுல் யேசுவின் மறைப்பணியை காசினியில் புரிவதற்கு பாசமாக பலபேர் வந்துகொண்டிருக்கின்ருர்கள். இறைவன் இவர்களை இருகரம் கூப்பி திருச்சபையின் பணிக்கு அழைக்கின்ருர் நாமும் போவோம்.

# அங்கம் 15

இடம் : தெரு

பங்குகொள்வோர் : பிரான்சிஸ் அசிசியார், மதம்பிடித்த ஓநாய்.

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : திரிபுடை

மெட்டு : ஆகமுமா யறிவினுள்ள றிவாய்

1. ஏகிடுவேன் சீரியா தேசம்
ஏசுவின் வார்த்தைகள் ஓத
போகிடுவேன் புதியது தேசம்
போதனை கூறுதற்கே

2. மீனுமாம் ஐந்ததை அன்று
மிச்சமாய் தந்தவர் சேவை!
நானுமாம் செய்வது வேண்டி
நாற்றிசை சென்றிடுவேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கோலதையே கரத்தினில் கொண்டே!
   கொஞ்சுமொழி மழலைகள் தேடி
நீலக்கடல் தாளமும் போட
   நிகழ்வது அவர் வாக்கே!

( மதங்கொண்ட ஓநாய் வருதல் )

**வசனம்:**

சகோதரனே! இங்கே வா! இறைமகன் யேசுவின் நாமத்தால் கட்டளையிடுகிறேன். எனக்கு ஒரு பொல்லாப்பையும் செய்யாதே! அத்துடன் நீ வேறொருவனுக்கும் பொல்லாப்பு செய்யாதே!

(ஓநாய் பணிகின்றது)

சகோதரனே! கடவுளால் படைக்கப்பட்ட பலவற்றை நீ நாசமாக்கி விட்டாய். கடவுளின் சாயலாகவே மனிதன் படைக்கப்பட்டதை மறந்து நீ அவைகளை நாசம் செய்து விட்டாய்.

தூக்குத் தண்டனை கொடுத்ததைப் போலவும், சதிசெய்து கொலை செய்ததைப் போன்றதுமான செயலை நீ செய்திருக்கின்றாய். உனது செயலால் மக்கள் உன்னை எதிரியாக நினைக்கின்றார்கள். எனது தாழ்மையான வேண்டுகோள் நீ மக்களுடன் சமாதானமாக இரு. நீ மக்களுடன் சமாதானமாக இருந்தால்உனது சீவியம் மட்டும் உனக்கு மக்கள் உணவளிப்பார்கள் நண்பனே! அகன்றுபோ! எனது வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கம் 16

**இடம்:** *சிரியா நாட்டின் சுல்தான் மலிக் இல் கமில் அரச சபை*

**பங்கு கொள்வோர்:** *சிரியா பேரரசன் சுல்தான் மலிக் இல் கமில் — பிரான்சிஸ் அசிசியார், ஏவலன்.*

**நிலைமை:** *பிரான்சிஸ் அசிசியார் சத்திய வேதம் போதித்துக்கொண்டு, நாட்டில் வலம் வரும்போது, சிரியா மன்னனின் ஏவலர்களால் கைது செய்யப்படுகின்றார்.*

**ஏவலன் வசனம்**

*சிரியாவின் பேரரசே! எமது நாட்டின் எல்லைக்குள் ஒரு ஐரோப்பியன் தனது சத்தியவேதத்தைப் போதித்துக்கொண்டிருக்கின்றான். அதனால் பலர் அவனைப் பின்தொடர்ந்து செல்லுகின்றார்கள்.*

**சுல்தான் களிநெடில் ஆசரிய விருத்தம்**

தேர்கொண்ட முடியரசர் படிமீதே வந்ததுமே!
தேனெழுகும் மலர்மாலை சூட்டிடுவார்!
தேசமதாம் சிரியா சுற்றுலாச் செய்வதற்கு
தேடியே வந்திட் டானோ?

பார்வெண்ட எந்தனது வீரமது அறிந்துமே
பார்த்திபர்கள் அணிகழலைப் பணிந்திடுவார்
பல்வேறு இனத்தவர்கள் பயந்துமே இருக்கையிலே
பரதேசி வருகை யேனோ!

போர்கண்ட வாழுமே உறங்குதே பல நாட்கள்
பொங்குகடல் வான்மலைகள் அடங்கிடுமே!
பொறிபட்ட எலிபோலே இங்குதான் வந்தோனை
பொடிப்படியாய் ஆக்கு வேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்பட்ட மரம்போலே வீழ்த்தியே சிரம்கொய்து
வேங்கைநரி உண்ணுதற்குச் செய்திடுவேன்
வெள்ளைநிற வெறியர்கள் போதனைகள் செய்வதற்கு
வெளிக்கிடவும் துணிவு மாச்சோ

சிந்து

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

மெட்டு : இப்படியும் சொன்னுளே!
(தேவசகாயம்பிள்ளை நாடகம்)

பல்லவி

இப்படித்தான் ஒதலாமோடா — பணி ஏவலனே!
இப்படித்தான் ஓதலாமோடா

அனுபல்லவி

இப்படித்தான் ஓதலாமோ!
அப்படித்தான் காலமாச்சோ!
முப்படைகள் இந்தநாட்டில்
எப்படித்தான் தப்பு வானே!

ஒட்டகமே! செய்ததைப்போல்
திட்டமதை தீட்டினரோ!
எட்டியே உதைத்ததுவாய்
வெட்டியே வீழ்த்திடுவேன்

எப்படித்தான்......

சரணம்

கண்டமதே விட்டதுவாய்
அண்டை யெந்தன் நாடுவந்து
சண்டையிட வந்தவனை
துண்டதுவாய் வெட்டுதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருந்துகள் அழையேனோ — அவனுடலை
விருந்துகள் வையேனோ — எப்படியும்

பித்தனைப்போல் இங்கு வந்து
சத்தமதே செய்பவனை
பத்திரமாய் கட்டியதாய்
மெத்தவுயிர் போக்கிடுவேன்

இப்படியும்...

### எண்சீர் சந்த விருத்தம்

மன்னனெந்தன் எழில்செறியும் மாநகரில் வந்துமே
மறையதைத்தான் ஓதுகின்ற மாற்றலனை நீருமே
இன்னலைத்தான் ஆயுதத்தால் இவ்விடத்தில் செய்யவே
இச்சணத்தில் என்னிடத்தில் இழுத்ததுவாய் வாருமே
என்மதத்தை இத்திசையில் ஏற்றவர்கள் தன்னையே
எப்படித்தான் மாற்றுதற்கு ஏற்றபலம் கொண்டானோ
சொன்னவெந்தன் கட்டளையின் சொற்படியே நடந்துமே
சோடிகரம் பிணைத்ததுவாய் சோரனையும் இழுந்துவா.

வசனம்:

அடேய் ஏவலனே! எமது நாட்டுக்குள் எமது அனுமதி யில்லாமல் உள்ளிட்ட கள்வனை அதி சீக்கிரத்தில் பிடித்து வரவும்.

### பணியாள் வசனம்

அரசே! எமது நாட்டுக்குள் அத்துமீறி உட்பிரவேசித்த அயோக்கியனைப் பிடித்து வந்திருக்கின்றோம்.

### சீரியா அரசன் களிநெடில்

குன்று வானங்களும் கடகடவென் றசையாதோ!
குருசையுமே காணலாச்சோ!
குடதிசை, வடதிசை, தென்திசை, குணதிசை
குவலய வரமு மஞ்சா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்று என் தன்னிலே! நின்றுநீ பேடியே!
மதிவுரைகள் உரைக்க வந்தாய்!
மடியவே! நீயுமே குடிபெயர்ந்து வந்தாயோ!
மமதைகள் அடக்குவேன் அடக்குவேன்.

**இராகம் :** மோகனம் **தாளம் :** அடதாளசாப்பு

**மெட்டு :** கூனற்றவளசங்க மாநித்தில்
(தேவசகாயம்பிள்ளை நாடகம்)

யேசு மறையைக் காட்டி தேசமெந்தன் தன்னை
நாசமாக்குதற்கு வேசம் தனையே போட்டாய்

அச்சம் அனைத்தும் விட்டு
மிச்சம் மேன்மை தொட்டு
உச்சம் உனது செட்டு
மெச்சல் மன்னன் கிட்டு

உரை சொல்ல துரைவெல்ல
தரைசெல்ல இரை நல்ல

பிடித்தேனுனை அடிப்பேன்
அடிப்பேன் அறிவாயே

**பிரான்சிஸ் அசிசியார் :**

மறையின் கருத்தை இன்று நிறைவுடன் செய்வதற்கு
சிறையது யிட்டா லுமே இறைவன் துணையும் உண்டு

துறவு தனையே பூண்டேன்
உறவும் பலது விட்டேன்
பிறப்பின் பவத்தைப் போக்க
சிறந்த பணியைக் கண்டேன்

சதியொன்று மில்லை ஐயா!
மதியதே கொண்ட வேந்தே!
அதிபதியுனை நானே!
துதியே செய்தேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீரியா மன்னன் களிநெடில்**

பஞ்சகோளங்களும் பயத்திஞல் ஓடாதோ
பகலிரவாய் மாற லாச்சே
படை கண்ட உடை கொண்ட
குடை கண்ட நடை வெண்ட
பார்த்திபன் நானிருக்க
வஞ்சனை யாகவே! வார்த்தைகள் ஓதவே!
வந்திட்ட உன்னை யிங்கு
வாள் ஆற்றல் தன்னிஞல் ஆள் தோற்றமின்றியே
வானுலகு அனுப்புவேன் அனுப்புவேனே!

**சிந்து**

கோவென் படியின்மீது தூதன் நீயும் வந்து
நாவால் பெருமையோடு பேசத்துணிவு கொண்டாய்
கண்டம் அதிரக் கொன்று
சண்டம் எனது குன்று
தண்டத் தோடு நின்று
அண்டம் அசையத் துண்டு
கதை மெய்ய உதை துய்ய
சதை கொய்ய வதை செய்ய
மூடாமுனி வீடாவிது
போடா வெளியாலே!

**பிரான்சிஸ் அசிசியார்:**

மூன்று நாளில் உயிர்த்தார்!
சான்று பலது உண்டு!
தோன்றும் அவரின் வார்த்தை
ஊன்று அவரே எல்லாம்!
ஈச னவரைக் கண்டேன்
நேசக் கரமும் கொண்டேன்
பாச மதிகம் தன்ஞல்
தாசன் வலமும் வந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரதே செய்யமாட்டோம்
பாரதே சிலுவை நன்ருய்
காருமெந்தன் சபையே!
வாரும் பகைவிடுத்தே!

வசனம்:

அரசே! உங்கள் மதத்தை இழிவுபடுத்தி யேசுமறையைப் போதிப்பதற்கு நான் வரவில்லை. எனது மறையைப் போதிக்க அனுமதி தாருங்கள். அதில் விருப்பம் கொண்டவர் ஏற்பார்கள். இதுதான் நான் சிரியாவுக்கு வருகை தந்த நோக்கமாகும்.

சீரியா அரசன் சுல்தான் மலிக் இல் கமில் வசனம்

முனிவரே! உன்னைப் பார்த்தால் பரந்த மனப்பான்மை யுள்ளவனகக் காணப்படுகின்ருய்!

உனது கருத்து, மக்கள் ஏற்ருல் எனக்கு ஆட்சேபனை இல்லை. சரி நீ உனது மதத்தைப் போதிக்க அனுமதி தந்தேன். சமதானத்தை ஒருவருக்கொருவர், தெரிவித்துக் கொள்வோம். சென்றுவாரும் பெரியோரே!

## அங்கம் 17

இடம்: பிரான்சிஸ் அசிசியார் ஆச்சிரமம்

பங்குகொள்வோர்: புனித பிரான்சிஸ்

நிலைமை: புனித பிரான்சிஸ் அசிசியார் யேசுவின் ஐந்து காயம் பதித்தல் (பின்னணி)

இராகம்: நீலாம்பரி    தாளம்: ஆதி

மெட்டு: மின்னிமைக்கும் ஒண்ணுதலே...
(விசயமனேகரன் நாடகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலிலுள்ள இரு காயம் பதித்தல் :**

மன்னவர்கள் இன்னலது போரே! எம்தன்
சின்னவரை அன்பதனுல் காரே என்னை
சிலுவையில் அறைந்துமே வலுவதாய் கொன்றனர்
நன்மைமொழி சென்றுரைப்பாய் நீரே! யூதர்
நள்ளிரவில் ஊறு செய்த காலே

**வசனம் மறைவொலி :**

குருவே உமது காலிலுள்ள இரு காயத்தையும் எனக்குப் பதித்து உன் அறவழி செல்ல வைத்தனையோ!

**கையிலுள்ள இரு காயங்களையும் பதித்தல் :**

செல்வமதை தொல்பவனுய் நீனையே! — மாயை
நில்லுலகில் இல்பொருள்தான் வினையே! — அன்று
கள்வரின் மத்தியில் முள்முடி அறைந்தனர்
தொல்பவத்தை வெல்வதற்கு முனையே! — நானும்
தொங்கியதோர் சிலுவையதன் கையே!

**வசனம்:**

யாவர்க்கும் வேறுகாட்டா அன்பை அளிக்கின்ற இறைவா! உனது இரு கைகளையும் இ ர த் த க் காயங்களுடன் பதித்தனையோ! இதோ! எல்லாரையும் மன்னித்து அரவணைக்கச் செல்வேன்.

**விலாவிலுள்ள காயத்தைப் பதித்தல்**

பகைமைகளும் வகையெடுக்கும் சதியே போல்
தகைமைகளை நகைவதுவாய் மதியே மூன்று
முறையது தன்னிலே இறைமகன் வீழ்ந்திட்டார்
தொகைகளின்றி முகை மலராய் வதியே
தரணிதனனில் குருதிபாய்ந்த வியாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசனம் :**

இறையேசே! பஞ்சகாயா! உன் **விலாக் காயத்தையும் என்னில் பதித்து** அன்பு **பகைமை பழிவாங்கல்** அகற்றி அன்பு நிறை **இதயத்தை** பதித்தனேயோ!

யாதும் ஊரே!
யாவரும் கேளிர்!

**( நாடகம் நிறைவு பெற்றது. )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றித் துளிகள்....

உலக நாடுகளாலும் பாப்பிறையாலும் பிரகடனப்படுத் தப்பட்ட சமாதான ஆண்டாக கொண்டாடப்படும் இவ்வாண்டில் சமாதானத்தின் தூதனாக தன் வாழ்வை தந்த புனித பிரான் சிஸ் அசிசியாரின் வரலாற்றை நாடகமாக நற்செய்தி பணி யகத்தின் உதவியோடு பாக்ஸ் கிறிஸ்ரி (Pax Christi) இயக்கத் தினரால் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

இந் நாடகத்துக்கு பலவித ஆலோசனைகள் தந்து ஊக்கு வித்து மலர் சிறக்க ஆசியுரை வழங்கிய யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கட்கும் நாடக சிறப்புக்கு ஆய்வுரை தந்து சிறப்பித்த யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கட்கும் நன்றி கூறுகின்றோம்.

கவிஞர் தேவதாசனின் எழுத்துக்கு மெருகூட்டிய புனித பிரான்சிஸ் அசிசியார் வரலாற்று நாடகத்தை அரங்கேற்ற உதவிய அண்ணன்மார் வளன்புரம் பேக்மன் ஜெயராசா, பாஷையூர் வஸ்தியாம்பிள்ளை அல்பிறற் அவர்கட்கும், இசை மெருகூட்டி சிறப்பித்த சட்டத்தரணி மு. அன்ரனிப்பிள்ளை அவர்கட்கும், சங்கீத பூஷணம் ராஜசிங்கம் அவர்கட்கும், நடிப் புத்திறனால் பலர் மனதில் பதியவைத்த கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சேவியர் குருத்துவக் கல்லூரி மாணவர்க ளுக்கும் பணிப்பாளர் வண. பிதா. பிலிப் பொன்னையா அடிக ளாருக்கும், குறுகிய காலத்தில் அழகுற அச்சேற்றி வெளியிட உதவிய "மணி ஓசை" ஸ்தாபனத்தாருக்கும் எமது நன்றி நினைவுகள் உரித்தாகுக.

உங்கள் நெஞ்சத்தில் சமாதான வித்தை விதைக்க விளை யும் எமது வெளியீடுகளுக்கு வாசகர்கள் தரும் நல் ஆதரவு மேலும் பல புதிய படைப்புகளை உருவாக்க உதவும் என்ற நம்பிக்கையோடு எழுத்துலக, வாசக இதயங்களை நன்றிப் பெருக்கால் நனைய வைக்கிறோம்.

சுவாமியார் வீதி
யாழ்ப்பாணம்

வெளியீட்டாளர்
சுவாமி ஜெயசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org